பொருளடக்கம்

பகுதி 1 மலக்குகள் என்பவர்கள். 7

பகுதி 2. பறக்கும் படைகள்! பண்புகளின் சிகரங்கள்!! 59

பகுதி 3. சிறகுகள் விரிக்கிறார்கள்! சிநேகமான செயல்வீரர்கள்!! 129
1. அல்லாஹ்வும் அவர்களும்.. 131
2. மனிதர்களும் அவர்களும்.. 137
3. மூ்மின்களும் அவர்களும்.. 155
4. மலக்குகளும் நபி (ஸல்) அவர்களும்.. 183
5. மலக்குகளும் கா்பிர்கள் மற்றும் பாவிகளும்.. 190
6. மலக்குகளும் அவர்களின் மற்ற பணிகளும்.. 200

பகுதி 4. மலக்குகளின் பெயர்களும் பொறுப்புகளும் 207

பகுதி 5. நாம் என்ன செய்ய வேண்டும்? 279

மலக்கு எப்படி மொழிபெயர்ப்பது?

மலக்கு என்றால் வானவர் என்கிறோம் தமிழில். இந்த அரபுச் சொல்லின் பன்மை மலாயிகா, அதாவது வானவர்கள்.

வானத்தில் வாழ்பவர்களாக, அங்கிருந்து கட்டளைகளைக் கொண்டு வருபவர்களாக இவர்கள் இருப்பதால், தமிழ் பேசிய முஸ்லிம் முன்னோர்கள் இவர்களை வானவர்கள் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். இதிலொன்றும் தவறு இருப்பதாகத் தெரியவில்லை.

இதே வானவர்களைத்தான் இந்துக்களும் கிறித்துவர்களும் தேவர்கள், தேவதைகள், அமரர்கள் என்று சொல்கிறார்கள். ஆனால் இந்தப் பெயர்கள் பிரச்சினையானவை. இவற்றின் பின்னணியில் வானவர்களைப் பற்றிய தவறான நம்பிக்கைகள் இருக்கின்றன. அந்த மூடநம்பிக்கைகளின் வாடை கூட இல்லாத வார்த்தைகளை இஸ்லாம் விரும்புகிறது. எனவே, எந்த முஸ்லிமும் வானவர்களை தேவர்கள், தேவதைகள், அமரர்கள் என்று சொல்ல மாட்டார். ஒரு பேச்சுக்குக் கூட அந்த நம்பிக்கைகள் தம்மிடம் இருக்கின்ற தோற்றத்தை ஏற்படுத்திக்கொள்ள மாட்டார். அவருக்கு இதில் தெளிவான தடை இருக்கிறது.

مَنْ تَشَبَّهَ بِقَوْمٍ فَهُوَ مِنْهُمْ

"யார் ஒரு சமுதாயத்திற்கு ஒப்பாக நடக்கிறாரோ, அவர் அவர்களைச் சேர்ந்தவர்தாம்" என்று எச்சரிக்கிறார்கள் நபி ﷺ அவர்கள்.

(அறிவிப்பு: இப்னு உமர் ؓ, சுனன் அபூதாவூது 4033, ஸஹீஹ் அல்ஜாமிஃ 6149)

முஸ்லிம் சமுதாயம், நபி ﷺ அவர்கள் உருவாக்கிய சமுதாயத்திற்கு ஒப்பாக இருக்க வேண்டும்; மற்ற சமுதாயங்களுக்கு ஒப்பாக அல்ல. நபியவர்கள் உருவாக்கிய சமுதாயம்தாம் நபித்தோழர்களின் சமுதாயம். அவர்களுக்கு ஒப்பாக, அதாவது அவர்களைப் போல நடப்பதே முஸ்லிம்களின் கடமை. நம்பிக்கைகள், சொல், செயல்கள் அத்தனையிலும் நபியவர்கள் உருவாக்கிய அந்த முதல் சமுதாயத்தைப் போல நடக்க வேண்டும். தேவர்கள், தேவதைகள், அமரர்கள் போன்ற வார்த்தைகளை முஸ்லிம் பயன்படுத்தினால், அவர் இந்துக்களுக்கும் கிறித்துவர்களுக்கும் ஒப்பாகத் தெரிகிறார். அவருடைய நம்பிக்கையும் அவர்களின் நம்பிக்கை போலத்தான் என்ற தோற்றத்தை உருவாக்குகிறது.

முஸ்லிமைப் பொறுத்தவரை ஒவ்வொரு அரபுச்சொல்லுக்கும் மொழிபெயர்ப்பைத் தேடிக்கொண்டிருக்கமாட்டார். காரணம், ஒரு சொல்லை அதன் சரியான அர்த்தத்தின்படி பொழிபெயர்க்க ஒரு வாக்கியமே தேவைப்படலாம். அல்லது, ஒரு பெயரை மொழிபெயர்த்து அது கோணங்கித்தனமாக ஆகிவிடலாம்.

தவிக்கிறார்கள். அவர்களின் இறைவனை அவர்களின் எதிரிகள் சிலுவையில் கொன்று அடக்கமே பண்ணிவிடுகிறார்கள். மூன்றாம் நாளில்தான் அவருக்குத் திரும்ப உயிர் வருகிறது. எவ்வளவு இழிவான நம்பிக்கை!) இச்சமயத்தில் அவருக்கு வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமும் கொடுக்கப்படுகிறது. அப்படியானால் அதற்கு முன்பு வரை இயேசுவுக்கு அந்த அதிகாரம் இல்லை. வெறும் மனிதர்.

இதற்குப் பின் என்ன நடந்தது? கீழுள்ள வசனத்தைப் படியுங்கள்:

1 பேதுரு 3:22 அவர் பரலோகத்திற்குப் போய், தேவனுடைய வலது பாரிசத்தில் இருக்கிறார்; தேவதூதர்களும் அதிகாரங்களும் வல்லமை களும் அவருக்குக் கீழ்ப்பட்டிருக்கிறது.

ஒரு புறம், தேவனாகவும் இன்னொரு புறம் தேவக்குமாரராகவும் இயேசுவைக் கற்பனை செய்கிறார்கள் கிறித்துவர்கள். இதன் காரண மாக, மலக்குகள் மீது அதிகாரம் செலுத்துகிற தகுதியை இயேசுக்கும் கொடுத்துவிட்டார்கள். ஆனால் உண்மை என்னவென்றால், எல்லா மலக்குகளும் ஏக வல்லவனாகிய அல்லாஹ்வின் அதிகாரத்தில் மட்டுமே இருக்கிறார்கள். அவனுடைய கட்டளையின்றி எதையும் யாருக்காகவும் அவர்கள் செய்ய மாட்டார்கள்.

யூதர்களின் குரோத நம்பிக்கை

யூதர்களுக்கு ஜிப்ரீல் ﷺ என்றாலே வெறுப்பும் குரோதமும் கொப்ப ளிக்கிறது. ஜிப்ரீலை மலக்குகளின் தலைவராகவும் அவர்கள் ஏற்றுக் கொள்வதில்லை. அவர்களைப் பொறுத்தவரை மீக்காயீல் ﷺ அவர்கள் தாம் தலைவர். இதையே கிறித்துவர்களும் நம்புகிறார்கள்.

தானியேல் 12:1 "உன் ஜனத்தின் புத்திரருக்காக நிற்கிற பெரிய அதிபதி யாகிய மிகாவேல் அக்காலத்திலே எழும்புவான். யாதொரு ஜாதியாரும் தோன்றினது முதல் அக்காலமட்டும் உண்டாயிராத ஆபத்துக்காலம் வரும்; அக்காலத்திலே புஸ்தகத்தில் எழுதியிருக்கிறவர்களாகக் காணப்படுகிற உன் ஜனங்கள் அனைவரும் விடுவிக்கப்படுவார்கள்."

யூதர்கள், ஜிப்ரீல் ﷺ மீது கொண்டிருந்த குரோதத்தைத் தெரிந்து கொள்ள இஸ்லாமிய வரலாறு ஒன்று இருக்கிறது. பின்வரும் செய்தி யைப் படியுங்கள்.

عَنِ ابْنِ عَبَّاسٍ قَالَ أَقْبَلَتْ يَهُودُ إِلَى رَسُولِ اللهِ صَلَّى اللَّهُ عَلَيْهِ وَسَلَّمَ فَقَالُوا يَا أَبَا الْقَاسِمِ إِنَّا نَسْأَلُكَ عَنْ خَمْسَةِ أَشْيَاءَ فَإِنْ أَنْبَأْتَنَا بِهِنَّ عَرَفْنَا أَنَّكَ نَبِيٌّ وَاتَّبَعْنَاكَ فَأَخَذَ عَلَيْهِمْ مَا أَخَذَ إِسْرَائِيلُ عَلَى بَنِيهِ إِذْ قَالُوا اللهُ عَلَى مَا نَقُولُ وَكِيلٌ قَالَ هَاتُوا قَالُوا أَخْبِرْنَا عَنْ عَلامَةِ النَّبِيِّ

மான இறக்கைகளிலிருந்து முத்துகளும் பவளங்களும் உதிர்ந்து கொண்டிருந்தன. (அழகிய) அதனைப் பற்றி அல்லாஹ்வே நன்கறிந்த வன்.

(முஸ்னது அஹ்மது 3748, இமாம் அல்பானீயின் அல்இஸ்ரா வல்மிஃராஜ் ப:102)

நிறமுடையவர்கள்

அறியாமையில் உள்ள பெரும்பாலோர், மலக்குகளை வெண்மை நிறமுடையவர்களாகவே கருதுகிறார்கள். ஆனால், நபிமொழிகளைக் கவனித்தால், அவர்கள் மற்ற நிறங்களிலும் தோன்றுவார்கள் என்று உறுதியாகிறது.

முதன் முதலில் நபி ﷺ அவர்கள் ஜிப்ரீலைப் பார்த்தபோது அவர் பச்சை ஆடையுடன் அடிவானத்தையே அடைத்தவாறு நிற்கக் கண்டார்கள். (ஸஹீஹுல் புகாரீ 3233,4858)

முன்கர் மற்றும் நகீர் ஆகிய இருவரும் கருநீலம் கொண்டவர்கள்.
(ஜாமிவுத் திர்மிதி 1071, அஸ்ஸஹீஹா 1391)

மரணத்தைக் கொண்டு வரும் மலக்குகள், மூஃமின்களிடம் வெண்மை முகமுடையவர்களாகவும், காஃபிர்களிடம் கருத்த முகமுடையவர் களாகவும் வருவார்கள்.

(முஸ்னது அஹ்மது 18557, அல்ஜாமிஃ அஸ்ஸகீர் 2556)

பிரமாண்டமான தோற்றமுடையவர்கள்; அதி பலசாலிகள்

மலக்குகள் சிலர், நம் கற்பனைக்கே எட்டாத பிரமாண்ட தோற்றத் திலும் இருக்கிறார்கள். ஜிப்ரீலின் தோற்றத்தைப் பற்றி முன்பே பார்த்தோம். வேறு பல ஆதாரங்களும் அவர்களின் பிரமிப்பூட்டும் தோற்றத்தைத் தெரிவிக்கின்றன.

நபி ﷺ அவர்கள் தாயிஃப் நகரில் கடுமையான துன்பத்திற்கு உள்ளான போது, ஜிப்ரீலுடன் மலைகளின் மலக்கை அல்லாஹ் அனுப்பியது நாம் அனைவரும் அறிந்த ஒன்று. அப்போது மலைகளின் மலக்கு கூறிய வார்த்தை, அவருடைய தோற்றத்தையும் பலத்தையும் நமக்கு உணர்த்துகிறது.

"முஹம்மதே! நீங்கள் விரும்பியபடி கட்டளையிடலாம். (இந்த நகரத் தின் இரண்டு பக்கங்களிலும் உள்ள) இந்த இரண்டு மலைகளையும் அவர்கள் மீது நான் புரட்டிப் போட்டுவிட வேண்டுமென்று நீங்கள் விரும்பினாலும் (உடனே அதைச் செய்வதற்கு நான் தயாராக உள்ளேன்)" என்றார் அந்த மலக்கு. (ஸஹீஹுல் புகாரீ 3231)

பெரும் மலைகளைக் கூட புரட்டிப் போடுகிற அளவு அவருக்குப் பலம்

பூமிக்குத் தங்களின் நிஜத்தோற்றத்தில் வருவதோடு, மனிதர்களின் தோற்றத்திலும் வருகிற வழக்கம் அவர்களுக்கு இருந்திருக்கிறது. நபிமார்களிடமும் நல்லோர்களிடமும் அப்படி வந்தார்கள். அதுமட்டுமின்றி, மனிதர்களுக்குச் சோதனையாகவும் அல்லாஹ் அவர்களை மனித வடிவில் அனுப்பினான். உதாரணம்: ஹாரூத் மாரூத், பனீ இஸ்ராயீலில் உள்ள மூன்று பேர்

மனித வடிவம் தவிர வேறு வடிவங்களில் அவர்கள் மாறியதற்கு எந்த ஆதாரமும் இல்லை. ஜின்களைப் போல் பாம்பாகவோ, நாயாகவோ அவர்கள் மாறுவதில்லை. அவர்கள் மனித வடிவில் மட்டுமே மாற வேண்டும் என்கிற நிலையை அல்லாஹ் ஆக்கியுள்ளான். இது மலக்குகளின் கண்ணியமான அந்தஸ்தைக் காட்டுவதோடு, மனிதப் படைப்பின் அந்தஸ்தையும் காட்டுகிறது.

மனிதத் தோற்றத்திலும் அவர்கள் ஆண்களின் தோற்றத்தில் மட்டுமே காட்சியளித்தார்கள். மர்யம் ﷺ ஒரு பெண்ணாக இருந்திருந்தும், அவர்களிடம் பெண்ணின் தோற்றத்தில் ஜிப்ரீல் ﷺ அனுப்பப்படவில்லை. திடகாத்திரமான வாலிப ஆணின் தோற்றத்தில்தான் ஜிப்ரீல் ﷺ அனுப்பப்பட்டார்கள். மலக்குகள் பெண்ணின் தோற்றத்தில் மாறியதற்கு எந்த ஆதாரமும் இல்லை. இது காஃபிர்கள் பலருடைய நம்பிக்கையைத் தகர்த்து எறிகிறது. அவர்கள் மலக்குகளை அல்லாஹ்வின் பெண் பிள்ளைகள் என்று கற்பனை செய்தார்கள். ஆனால் மலக்குகளோ அந்தத் தோற்றத்தில் கூட மாறுவதில்லை.

மலக்குகளைப் பார்ப்பது குறித்து ஏழு கேள்விகள்

மலக்குகளைப் பார்ப்பது குறித்து பல வகையான கேள்விகள் உண்டு. அவை ஒவ்வொன்றுக்கும் விடைகளை அறிவோம்.

கேள்வி 1 சேவல்கள் மலக்குகளை அவர்களின் நிஜத்தோற்றத்தில் பார்க்கிறார்களா?

ஷெய்க் முஹம்மது இப்னு அப்துல் வஹ்ஹாப் அல்அகீல் அவர்கள் கூறுவது என்னவெனில், சேவல்கள் மலக்குகளைப் பார்க்கிறார்கள் என்றே நபிமொழியில் வந்துள்ளது. அவை எப்படிப் பார்க்கின்றன என்றோ, எந்தத் தோற்றத்தில் பார்க்கின்றன என்றோ நாம் அறியமாட்டோம். நபிமொழியில் வந்துள்ளபடியே நாம் சொல்லிவிட வேண்டும். அல்லாஹ்தான் நன்கறிந்தவன்.

(அல்மலாஇகத்துல் முகர்ரபீன்)

عَنْ أَبِي هُرَيْرَةَ رَضِيَ اللَّهُ عَنْهُ أَنَّ النَّبِيَّ صلى الله عليه وسلم قَالَ إِذَا سَمِعْتُمْ صِيَاحَ الدِّيَكَةِ

فَاسْأَلُوا اللَّهَ مِنْ فَضْلِهِ فَإِنَّهَا رَأَتْ مَلَكًا وَإِذَا سَمِعْتُمْ نَهِيقَ الْحِمَارِ فَتَعَوَّذُوا بِاللَّهِ مِنَ الشَّيْطَانِ فَإِنَّهُ رَأَى شَيْطَانًا

நபி ﷺ அவர்கள் கூறினார்கள்: சேவல் கூவுகின்ற சத்தத்தைக் கேட்டால், அல்லாஹ்விடம் அவனுடைய அருளைக் கேளுங்கள். ஏனென்றால், அது மலக்கைப் பார்க்கின்றது. (அதனால்தான் கூவுகின்றது.) கழுதை கத்தும் சத்தத்தைக் கேட்டால், ஷைத்தானை விட்டு அல்லாஹ்விடம் பாதுகாப்புக் கேளுங்கள். ஏனென்றால், அது ஷைத்தானைப் பார்க்கின்றது.

(அறிவிப்பு: அபூஹுரைரா ரழி, ஸஹீஹுல் புகாரீ 3303, ஸஹீஹ் முஸ்லிம் 5275)

ஏன் சேவல் கூவும்போது நபியவர்கள் அல்லாஹ்வின் அருளைக் கேட்கச் சொல்கிறார்கள்? இமாம் இப்னு ஹஜர் ரஹ் அவர்களின் எழுத்தில் இதற்குப் பதில் கிடைக்கிறது. அவர்கள் எழுதுகிறார்கள்: இதற்கான காரணத்தை இயாள் ரஹ் கூறும்போது, ஒருவர் தம்முடைய பிரார்த்தனைகளுக்கு மலக்குகள் 'ஆமீன்' சொல்வதை எதிர்பார்த்து அப்படிச் செய்ய வேண்டும். (எந்தப் பிரார்த்தனைக்கு மலக்குகள் ஆமீன் சொன்னார்களோ, அது அல்லாஹ்விடம் அப்போது விரைந்து ஏற்கப்படும்.) அது மட்டுமின்றி, அவர்கள் அம்மனிதருக்காக அல்லாஹ்விடம் பாவமன்னிப்பும் கேட்கிறார்கள். அவருடைய மனத்தூய்மைக்குச் சாட்சியாகவும் ஆகிவிடுகிறார்கள்.

(ஃபத்ஹுல் பாரீ 6/335)

கேள்வி 2 அவர்களை நாம் பார்க்க முடியாவிட்டாலும், மனித வடிவத்தில் நம்மிடம் வரும்போதேனும், அவர்கள் வந்திருப்பதை நாம் கண்டுகொள்ள முடியுமா?

முடியாது என்பதே அறிஞர்களின் பதில்.

அவர்கள் மலக்குகள்தாம் என்பதற்கு வஹ்யி இறங்க வேண்டும். அது நபிமார்கள் காலத்துடன் முடிந்துவிட்டது. நபி இப்றாஹீமும் லூத்தும் ஆரம்பத்தில் அவர்களை மனிதர்கள் என்றே நினைத்தார்கள். அந்த மலக்குகளே தங்களை அறிமுகம் செய்துகொண்டபோதுதான், அவர்களுக்கும் உண்மை தெரிய வந்தது. நபிமார்களுக்கு அதுவே வஹ்யி.

நபி அல்லாத நல்லோர்களிடம், உதாரணமாக மர்யம் ரழி அவர்களிடம் வந்தபோதும் இதுதான் நடந்தது. ஜிப்ரீல்தான் தம்மை அறிமுகம் செய்துகொண்டார்கள். இது மர்யமுக்கு அல்லாஹ் வெளிப்படுத்திய அற்புதமாகும்.

2. மனிதர்களும் அவர்களும்..

1. ஆதமும் அவர்களும்..

அல்லாஹ், ஆதம் அவர்களுக்கு ஸஜ்தா செய்யுமாறு மலக்குகளுக்குக் கட்டளையிட்டான். மலக்குகள் அவனுடைய கட்டளைப்படி ஸஜ்தா செய்து ஆதமைக் கண்ணியப்படுத்தினார்கள்.

إِذْ قَالَ رَبُّكَ لِلْمَلَائِكَةِ إِنِّي خَالِقٌ بَشَرًا مِنْ طِينٍ (٧١) فَإِذَا سَوَّيْتُهُ وَنَفَخْتُ فِيهِ مِنْ رُوحِي فَقَعُوا لَهُ سَاجِدِينَ (٧٢) فَسَجَدَ الْمَلَائِكَةُ كُلُّهُمْ أَجْمَعُونَ (٧٣) إِلَّا إِبْلِيسَ اسْتَكْبَرَ وَكَانَ مِنَ الْكَافِرِينَ (٧٤)

(நபியே!) உம் இறைவன் மலக்குகளை நோக்கி, "நான் மனிதனைக் களி மண்ணால் படைக்கப் போகிறேன்" என்று கூறிய சமயத்தில், "நான் அவரைச் செப்பனிட்டு, அவருக்குள் நம்முடைய உயிரையும் புகுத்தினால் அவருக்குச் சிரம்பணிந்தவர்களாக விழுங்கள்'' என்றும் கூறினான். மலக்குகள் அனைவருமே சிரம்பணிந்தார்கள், இப்லீஸைத் தவிர. அவன் கர்வம் கொண்டு காஃபிர் ஆகிவிட்டான்.

(அல்குர்ஆன் 38:71-74)

இப்லீஸின் குணத்திலிருந்து மலக்குகளின் குணம் வேறுபட்டது என்பதற்கு இது முக்கிய ஆதாரம். மலக்குகளை அல்லாஹ் அறிமுகம் செய்யும் இடமே இங்கிருந்துதான் தொடங்குகிறது. அல்லாஹ்வின் கட்டளைக்குக் கீழ்ப்படிந்த வகையிலும், நம்முடைய தந்தை ஆதமுக்கு ஸஜ்தா செய்து அவர்களைக் கண்ணியப்படுத்திய வகையிலும் மலக்குகள் நம் நேசத்திற்குரியவர்கள்.

அவர்களிடம் ஆதம் கற்றுக்கொண்டது என்ன?

عَنْ أَبِي هُرَيْرَةَ رَضِيَ اللَّهُ عَنْهُ عَنِ النَّبِيِّ صلى الله عليه وسلم قَالَ خَلَقَ اللَّهُ آدَمَ وَطُولُهُ سِتُّونَ ذِرَاعًا ثُمَّ قَالَ اذْهَبْ فَسَلِّمْ عَلَى أُولَئِكَ مِنَ الْمَلاَئِكَةِ فَاسْتَمِعْ مَا يُحَيُّونَكَ تَحِيَّتُكَ وَتَحِيَّةُ ذُرِّيَّتِكَ فَقَالَ السَّلاَمُ عَلَيْكُمْ فَقَالُوا السَّلاَمُ عَلَيْكَ وَرَحْمَةُ اللهِ فَزَادُوهُ وَرَحْمَةُ اللهِ

அல்லாஹ்வின் தூதர் ﷺ கூறினார்கள்: வல்லமையும் மாண்பும் மிக்க அல்லாஹ், ஆதமைத் தன்னுடைய உருவத்தில் படைத்தான். அவருடைய உயரம் அறுபது முழங்களாகும். அவரைப் படைத்தபோது, "நீங்கள் சென்று, அங்கு அமர்ந்திருக்கும் மலக்குகள் கூட்டத்திற்கு ஸலாம் கூறுங்கள். அவர்கள் உங்களுக்குக் கூறும் பதிலைக் கேட்டுக் கொள்ளுங்கள். ஏனெனில், அதுதான் உங்களது ஸலாமும் உங்க

ஜமாஅத் தொழுகைக்குக் காத்திருப்போருக்காக..

لاَ يَزَالُ الْعَبْدُ فِي صَلاَةٍ مَا كَانَ فِي مُصَلاَّهُ يَنْتَظِرُ الصَّلاَةَ وَتَقُولُ الْمَلاَئِكَةُ اللَّهُمَّ اغْفِرْ لَهُ اللَّهُمَّ ارْحَمْهُ. حَتَّى يَنْصَرِفَ أَوْ يُحْدِثَ

அடியார் தொழுகையை எதிர்பார்த்துத் தொழுமிடத்தில் அமர்ந் திருக்கும் வரை அவர் தொழுகையில் இருப்பவராகவே கருதப்படு கிறார். அப்போது மலக்குகள், "அல்லாஹ்வே! இவருக்கு மன்னிப்ப ளித்திடு! அல்லாஹ்வே! இவருக்குக் கருணை காட்டிடு!" என்று பிரார்த் திக்கின்றனர். அவர் திரும்பிச் செல்லும் வரை அல்லது அவருக்குச் சிறுதுடக்கு ஏற்படும்வரை (இது நீடிக்கும்).

(அறிவிப்பு: அபூஹுரைரா ﷺ, ஸஹீஹ் முஸ்லிம் 1176,1178)

தொழுகையை எதிர்பார்த்துக் காத்திருப்பவருக்கு மட்டுமல்ல, தொ ழுது முடித்துவிட்டு அதே இடத்தில் அமர்ந்திருப்பவருக்கும் இப்படித் துஆ செய்கிறார்கள்.

إِنَّ الْمَلاَئِكَةَ تُصَلِّي عَلَى أَحَدِكُمْ مَا دَامَ فِي مَجْلِسِهِ تَقُولُ اللَّهُمَّ اغْفِرْ لَهُ اللَّهُمَّ ارْحَمْهُ مَا لَمْ يُحْدِثْ وَأَحَدُكُمْ فِي صَلاَةٍ مَا كَانَتِ الصَّلاَةُ تَحْبِسُهُ

உங்களில் ஒருவர் தாம் தொழுத இடத்திலேயே வீற்றிருக்கும்வரை அவருக்காகமலக்குகள்பிரார்த்திக்கிறார்கள்."அல்லாஹ்வே! இவருக்கு மன்னிப்பளிப்பாயாக! அல்லாஹ்வே! இவருக்குக்கருணை புரிவாயாக!" என்று அவர்கள் பிரார்த்தித்துக்கொண்டிருக்கிறார்கள்; அவருக்குச் சிறு துடக்கு ஏற்படாமல் இருந்தால். உங்களில் ஒருவர் தொழுகையை எதிர்பார்த்துத் தம்மைக் கட்டுப்படுத்திக்கொண்டிருக்கும்வரை அவர் தொழுதுகொண்டிருப்பவராகவே கருதப்படுகிறார்.

(ஸஹீஹ் முஸ்லிம் 1175)

இமாம் அதா இப்னு ஸாய்ப் ﷺ கூறியதாக இமாம் அப்துல்லாஹ் இப்னுல் முபாரக் ﷺ கூறுகிறார்கள்:

நாங்கள் அபூஅப்திர் ரஹ்மான் ஸல்மா அவர்களைச் சந்திக்கச் சென் றோம். அப்போது அவர் மஸ்ஜிதில் மரணிக்கும் நிலையில் இருந்தார். அவர் வீட்டிற்குச் செல்வதே நலமானது என்று நாங்கள் அவரிடம் ஆலோசனை கூறினோம். அதற்கு அவர், "இன்னின்ன மனிதர் தமக்கு அல்லாஹ்வின் தூதரிடமிருந்து அறிவித்ததாகக் கூறி, "உங்களில் யார் மஸ்ஜிதில் தொழுகையை எதிர்பார்த்தவராகக் காத்திருக்கிறாரோ, அவர் தொழுபவராகவே கருதப்படுகிறார்" என்றார்.

இமாம் இப்னு சஅத் ﷺ அவர்களின் அறிவிப்பில், "மலக்குகள்,

தீர்கள். உங்களில் ஒருவர் ஒரு மிடறு தண்ணீராவது குடியுங்கள். நிச்சய மாக அல்லாஹ், ஸஹ்ர் செய்வோர் மீது அருள்புரிகிறான். அவர் களுக்காக மலக்குகளும் அருளைப் பிரார்த்திக்கிறார்கள்.

(அறிவிப்பு: அபூசயீத் அல்குத்ரீ ﷺ, முஸ்னது அஹ்மது 11414, அஸ்ஸஹீஹா 1654)

ஸலவாத் சொல்வோருக்காக..

அல்லாஹ்வின் தூதர் ﷺ கூறினார்கள்:

مَا مِنْ مُسْلِمٍ يُصَلِّي عَلَيَّ إِلاَّ صَلَّتْ عَلَيْهِ الْمَلاَئِكَةُ مَا صَلَّى عَلَيَّ فَلْيُقِلَّ الْعَبْدُ مِنْ ذَلِكَ أَوْ لِيُكْثِرْ

எந்த முஸ்லிம் என் மீது ஸலவாத் சொல்வாரோ, அவர் சொல்லும் காலமெல்லாம் அவருக்காக மலக்குகள் அல்லாஹ்வின் அருளைப் பிரார்த்திக்கிறார்கள். எனவே, அந்த அடியார் அதைக் குறைவாகச் சொல்வதா, அதிகமாகச் சொல்வதா என்பதைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளட்டும்.

(அறிவிப்பு: ஆமிர் இப்னு ரபீஆ ﷺ கனன் இப்னுமாஜா 907, ஸஹீஹ் அல்ஜாமிஃ 5744)

நோயாளியை நலம் விசாரிப்போருக்காக..

مَا مِنْ مُسْلِمٍ يَعُودُ مُسْلِمًا غُدْوَةً إِلاَّ صَلَّى عَلَيْهِ سَبْعُونَ أَلْفَ مَلَكٍ حَتَّى يُمْسِيَ وَإِنْ عَادَهُ عَشِيَّةً إِلاَّ صَلَّى عَلَيْهِ سَبْعُونَ أَلْفَ مَلَكٍ حَتَّى يُصْبِحَ وَكَانَ لَهُ خَرِيفٌ فِي الْجَنَّةِ

எந்த முஸ்லிம் இன்னொரு முஸ்லிமின் உடல் நலனை விசாரிக்கக் காலையில் செல்கிறாரோ, அவருக்காக மாலை வரை எழுபதாயிரம் மலக்குகள் அல்லாஹ்வின் அருளை வேண்டிப் பிரார்த்தனை செய்கி றார்கள். அவர் மாலையில் உடல் நலனை விசாரிக்கச் சென்று வந்தால், மறுநாள் காலை வரை அவருக்காக எழுபதாயிரம் மலக்குகள் அல்லாஹ்வின் அருள் வேண்டிப் பிரார்த்தனை செய்கிறார்கள். அவருக்காக சொர்க்கத்தில் கனி வகைகள் உண்டு.

(அறிவிப்பு: அலீ ﷺ, ஜாமிவுத் திர்மிதி 969, ஸஹீஹ் அல்ஜாமிஃ 5767, அஸ்ஸஹீஹா 1367)

வுளூ செய்துவிட்டு உறங்குவோருக்காக..

مَنْ بَاتَ طَاهِرًا، بَاتَ فِي شِعَارِهِ مَلَكٌ لَا يَسْتَيْقِظُ سَاعَةً مِنَ اللَّيْلِ إِلَّا قَالَ الْمَلَكُ: اللهُمَّ اغْفِرْ لِعَبْدِكَ فُلَانٌ فَإِنَّهُ بَاتَ طَاهِرًا

ஒருவர் தூய்மையான நிலையில் உறங்கச் சென்றால், அவரின் போர் வையில் மலக்கு ஒருவர் தங்கிவிடுகிறார். இரவின் எந்த நேரத்தில் அவர் கண்விழித்தாலும், அந்த மலக்கு, "அல்லாஹ்வே! உனது இன்ன அடியாரை மன்னித்திடு. காரணம், அவர் தூய்மையுடன் உறங்கி

5. மலக்குகளும் காஃபிர்கள் மற்றும் பாவிகளும்..

மலக்குகள் அல்லாஹ்வை நிராகரிக்கும் காஃபிர்களையும் அவனுக்கு மாறுசெய்கின்ற பாவிகளையும் வெறுக்கிறார்கள். பாவங்களை வெறுப்பதுடன், அவற்றைச் செய்பவர்களைச் சபிக்கவும் செய்கிறார்கள். காஃபிர்களை அழிப்பதற்கு அவர்கள்தாம் அனுப்பப்படுகிறார்கள் என்பதால், கடும் வேதனையைக் கொண்டு வருகிறார்கள்.

மலக்குகளைத் தக்க காரணத்திற்காகவே இறக்குவதாகச் சொல்லும் ஓரிடத்தில் அல்லாஹ் இவ்விஷயத்தைக் குறிப்பிடுகிறான்.

لَوْ مَا تَأْتِينَا بِالْمَلَائِكَةِ إِنْ كُنْتَ مِنَ الصَّادِقِينَ (٧) مَا نُنَزِّلُ الْمَلَائِكَةَ إِلَّا بِالْحَقِّ وَمَا كَانُوا إِذًا مُنْظَرِينَ

"உண்மையாகவே நீர் உண்மை சொல்பவராக இருந்தால் (உமக்குச் சாட்சியாக) நீர் எங்களிடம் மலக்குகளை அழைத்துக்கொண்டு வர வேண்டாமா?" என்று (நபியே!) கேட்கிறார்கள். நாம் தக்க காரணத்துடனே தவிர மலக்குகளை இறக்குவதில்லை. அச்சமயம் அவர்களுக்குச் சிறிதும் அவகாசம் கொடுக்கப்படுவதில்லை.

(அல்குர்ஆன் 15:7,8)

மலக்குகளை அழைத்துக்கொண்டு வந்து காட்டினால்தான் உங்களை அல்லாஹ்வின் தூதராக ஏற்றுக்கொள்வோம் என்று நபி ﷺ அவர்களிடம் நிராகரிப்பாளர்கள் வைத்த வாதத்திற்குத் தக்க பதிலடியை அல்லாஹ் இப்படிக் கொடுத்தான். அதாவது, மலக்குகள் வீணாக அனுப்பப்படமாட்டார்கள். தக்க காரணம் தேவை. உண்மையில் அவர்கள் அனுப்பப்பட்டுவிட்டால், உங்கள் கதை முடிந்துவிடும். உங்கள் மீது அவர்கள் தண்டனையைத்தான் கொண்டு வருவார்கள் என்று எச்சரித்தான்.

லூத் ﷺ சமுதாயத்தை அழித்தவர்கள்

நபி லூத் ﷺ அவர்களின் சமுதாயத்தை அழிப்பதற்கு அழகிய இளைஞர்களின் தோற்றத்தில் மலக்குகள் அனுப்பப்பட்டதை முன்பே பார்த்தோம். அவர்களை நபி லூத் ﷺ கண்ணியமான முறையில் வரவேற்றார்கள். அவர்களுக்குத் தெரியாது, வந்திருப்பவர்கள் மலக்குகள் என்று. ஆனால் அதற்குள் லூத்தின் மனைவி, இவர்களின் வருகையைப் பற்றி அவ்வூரில் இருந்த கேடுகெட்ட மனிதர்களுக்குத் தகவலைக் கொடுக்க, அவர்களோ அங்கு வந்துவிட்டார்கள்.

6. மலக்குகளும் அவர்களின் மற்ற பணிகளும்..

அல்லாஹ்வால் எதுவும் முடியும். அவன் ஒரு கட்டளையிட்டால் போதும், அனைத்தும் நடந்துவிடும். ஆனாலும், அல்லாஹ் இப்பிர பஞ்சத்தின் இயக்கத்தை மலக்குகளுக்குச் சில பொறுப்புகளைக் கொடுப் பதின் மூலம் நடத்தி வருகிறான். அல்லாஹ் கூறுகிறான்:

فَالْمُدَبِّرَاتِ أَمْرًا

எல்லாக் காரியங்களையும் நிர்வகிப்பவர்கள் மீது சத்தியமாக!

(அல்குர்ஆன் 79:5)

وَالذَّارِيَاتِ ذَرْوًا (١) فَالْحَامِلَاتِ وِقْرًا (٢) فَالْجَارِيَاتِ يُسْرًا (٣) فَالْمُقَسِّمَاتِ أَمْرًا (٤)

(கடல் நீரை ஆவியாக்கிச் சிதறடிக்கும்) சூறாவளிகள் மீதும், (அந்த நீராவியைச்) சுமந்து செல்லும் மேகத்தின் மீதும், (பல பாகத்திற்கு அதனை) எளிதாகத் தாங்கிச் செல்லும் மேகத்தின் மீதும், அதனைப் (பூமியில் பல பாகங்களில்) பிரித்துவிடும் மலக்குகள் மீதும் சத்தியமாக!

(அல்குர்ஆன் 51:1-4)

இந்த அத்தனையையும் மலக்குகள்தாம் செய்கிறார்கள். உதாரண மாக, நபிமொழியில் இடியைப் பற்றிக் கூறப்படும்போது அது ஒரு மலக்கின் சப்தம் என்றும், அவர் அல்லாஹ்வைப் புகழ்ந்து மேகங் களை நிர்வகிக்கிறார் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

யூதர்கள், "அபுல் காசிம்! இடியைப் பற்றி எங்களுக்குச் சொல்லுங்கள். அது என்ன?" என்று நபி ﷺ அவர்களிடம் கேட்டார்கள். அப்போது,

مَلَكٌ مِنَ الْمَلَائِكَةِ مُوَكَّلٌ بِالسَّحَابِ مَعَهُ مَخَارِيقُ مِنْ نَارٍ يَسُوقُ بِهَا السَّحَابَ حَيْثُ شَاءَ اللَّهُ

"மலக்குகளில் ஒரு மலக்கு மேகங்களை நிர்வகிக்கும் பொறுப்பில் உள்ளார். அவரிடம் நெருப்பினாலான ஈட்டிகள் இருக்கின்றன. அவற் றின் மூலம் மேகங்களை அல்லாஹ் நாடிய இடங்களிலெல்லாம் ஓட்டு கிறார்" என்று நபியவர்கள் பதில் சொன்னார்கள்.

(அறிவிப்பு: இப்னு அப்பாஸ் ؓ, ஜாமிவுத் திர்மிதி 3117, ஸஹீஹ் அல்ஜாமிஃ 3553)

ஆகவேதான், மழை ஓரிடத்தில் பெய்கிறது; மற்றோர் இடத்தில் பெய் யாமல் உள்ளது. எந்த அளவிற்கெனில், ஒரு குறிப்பிட்ட மனிதரின் வயலுக்கோ, தோட்டத்திற்கோ மட்டும் கூட மழை பெய்யும். மலக் குதான் அதைச் செய்வார்.

عَنْ أَبِي هُرَيْرَةَ عَنِ النَّبِيِّ صلى الله عليه وسلم قَالَ بَيْنَا رَجُلٌ بِفَلاَةٍ مِنَ الأَرْضِ فَسَمِعَ صَوْتًا

ஜிப்ரீல்

எத்தனையோ செய்திகளை ஜிப்ரீல் ﵇ பற்றி முன்பே கண்டோம். விடுபட்ட சிலவற்றை இங்கே பார்ப்போம்.

பெயர்களால் கண்ணியப்படுத்தப்பட்டவர்

ஜிப்ரீல் ﵇ அவர்களைப் பற்றிக் குர்ஆனில் அல்லாஹ் பல இடங்களில் பேசியுள்ளான். சில இடங்களில் அவர்களின் பெயர்களுடனும், சில இடங்களில் அவர்களைப் பற்றிய வருணனையுடனும் பேசியுள்ளான்.

ஜிப்ரீலை அல்லாஹ் அர்ரூஹ் என்கிறான். இதன் அர்த்தம், உயிர் அல்லது ஆன்மா என்பதாகும். அல்லாஹ்வின் வஹ்யியை அவர்கள் தாம் நபிமார்களிடம் சேர்த்தார்கள். அதன் மூலம் மக்களின் உள்ளங்களுக்கு உயிர் கொடுத்தார்கள். மேலும், மர்யம் ﵇ அவர்கள் நபி ஈசா ﵇ அவர்களைக் கருவுற, ஜிப்ரீல்தான் உயிரை ஊதினார்கள். அந்த உயிர், மர்யமின் உடலுள் புகுந்து, அவர்கள் கருவுற்றார்கள். இதனால் ஜிப்ரீலையும் தனது ரூஹ் என அல்லாஹ் கூறினான்.

فَأَرْسَلْنَا إِلَيْهَا رُوحَنَا

ஆகவே, நம்முடைய ரூஹை (ஜிப்ரீலை) அவரிடம் அனுப்பினோம்.
(அல்குர்ஆன் 19:17)

அடுத்து, ஜிப்ரீலை ருஹுல் அமீன் என்றும் அல்லாஹ் கூறியுள்ளான். இதன் அர்த்தம், நம்பிக்கைக்குரிய ஆன்மா என்பதாகும். அல்லாஹ் கூறுகிறான்:

وَإِنَّهُ لَتَنْزِيلُ رَبِّ الْعَالَمِينَ (١٩٢) نَزَلَ بِهِ الرُّوحُ الْأَمِينُ (١٩٣) عَلَى قَلْبِكَ لِتَكُونَ مِنَ الْمُنْذِرِينَ (١٩٤)

இது அகிலத்தாரின் இறைவனால் இறக்கப்பட்டதாகும். (நபியே!) நீர் எச்சரிப்பவர்களில் ஒருவராக இருக்க வேண்டும் என்பதற்காக, இதை உம்முடைய உள்ளத்தில் நம்பிக்கைக்குரிய ஆன்மா (ஜிப்ரீல்) இறக்கினார். (அல்குர்ஆன் 26:192-194)

தன்னுடைய தூதர்களுக்குத் தன் செய்தியை எடுத்துச் சொல்லும் மிக முக்கியப் பணியில் ஜிப்ரீல் ﵇ இருந்ததால் அவருக்கு இப்பெயர் கூறப்பட்டது.

மற்றொரு பெயர், ரூஹுல் குத்ஸ். இதற்கு, பரிசுத்தமான ஆன்மா என்று பெயர்.

ஜிப்ரீலும் நபி ﷺ அவர்களும்..

இது பற்றிப் பல செய்திகள் முன்பே சென்றுள்ளன. ஜிப்ரீலை நபி ﷺ

பொறுப்பு கொடுக்கப்பட்டவர். அத்துடன், அர்ஷை சுமப்பவர்களில் ஒருவராகவும் இருக்கிறார்.

மூன்றாவது: மீகாயீல். இவர் மழையைப் பொழிவிப்பது, தாவரங்களை வளர்ப்பது ஆகிய பொறுப்பில் இருக்கிறார்.

இந்த மூன்று மலக்குகளும் உயிர் கொடுக்கும் பொறுப்பில் உள்ளார் கள். ஜிப்ரீல், வஹ்யி கொண்டு சேர்க்கும் பொறுப்பில் இருப்பதின் மூலம் உள்ளங்களுக்கு உயிர் கொடுக்கிறார். மீகாயீல், மழை பொழி வித்து தாவரங்களை வளர்க்கும் பொறுப்பில் இருப்பதின் மூலம் பூமிக்கு உயிர் கொடுக்கிறார். இஸ்ராஃபீல், சூர் ஊதும் பொறுப்பில் இருப்பதின் மூலம் இறந்த உடல்களுக்கு மறுமை நாளில் உயிர் கொடுக்கிறார். *(ஷரஹ் அல்அகீதத்தில் வாசித்தியா, ப:45)*

மாலிக்

நரகத்தின் பொறுப்பாளர்கள் நரக நெருப்பை எப்போதும் கூடு தணியாதபடி எரித்துக்கொண்டே இருப்பார்கள். அவர்களின் தலைவர் தாம் மாலிக். அல்லாஹ் கூறுகிறான்:

فَلْيَدْعُ نَادِيَهُ (١٧) سَنَدْعُ الزَّبَانِيَةَ (١٨)

ஆகவே, (அபூஜஹ்ல் ஆகிய) அவன் (தன் உதவிக் காகத்) தன் சபையோரை அழைக்கட்டும். நாமும் (அவனை நரகத்திற்கு அனுப்ப, நரகத்தின்) காவலாளிகளை அழைப்போம். *(அல்குர்ஆன் 96:17,18)*

மாலிக் ﷺ அவர்கள் காஃபிர்களிடம் கொஞ்சமும் கருணை காட்ட மாட்டார். அல்லாஹ் கூறுகிறான்:

وَنَادَوْا يَا مَالِكُ لِيَقْضِ عَلَيْنَا رَبُّكَ قَالَ إِنَّكُمْ مَاكِثُونَ

"மாலிக்கே! உம்முடைய இறைவன் எங்களுடைய காரியத்தை முடித் துவிடட்டும்" என்று சப்தமிடுவார்கள். அதற்கவர், "(முடியாது!) நிச்சய மாக நீங்கள் இதே நிலைமையில் (வேதனையை அனுபவித்துக் கொண்டே இறக்காமல்) இருக்க வேண்டியதுதான்" என்று கூறுவார். *(அல்குர்ஆன் 43:77)*

முன்கர் மற்றும் நகீர்

முன்கர், நகீர் இருவரும் மண்ணறையில் விசாரணை செய்யும் பொறுப்பில் உள்ளவர்கள்.